1st September 1970]

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி ; (அ) இவ்விரு நகராட்சிகளிலும் 18 வயதுக்குக் குறைந்த யாரும் நகர சுத்தி வேலைக்கு அமர்த்தப்படவில்லை என்று அரசுக்குக் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது.

(இ) இவ்வினா எழவில்லை. இருப்பினும், எந்தவொரு நகராட்சியிலும் சிறுவர் எவரும் நகர சுத்தி வேலையில் அமர்த்தப்படக்கூடாது என்று அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

Railway Cess Fund

*70. —THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the Thanjavur District Board Railway Cess Fund was utilised from 1st April, 1968 till date ; and

(b) if not, the reasons for the same ?

இரயில்வே செஸ் நிதி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து இன்று வரை தஞ்சாவூர் மாவட்ட வாரிய இரயில்வே செஸ் நிதி உபயோகப் படுத்தப்பட்டதா ?

(இ) இல்லை எனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) இல்லை.

(இ) விளையாட்டரங்கு ஒன்றைக் கட்டுவதற்காக ஒரு லட்சம் ரூபாய் பயன்படுத்துவதற்கு 1968-ம் ஆண்டில் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் செயற்குறிப்புகளைப் பணிந்தனுப்பினர். மேற்சொன்ன நோக்கத்திற்காக இத்தொகையைப் பயன்படுத்த இப்போதுள்ள விதிகள் அனுமதிக்காத காரணத்தினல் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. திருந்திய செயற்குறிப்புகளை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டுள்ளது.

திரு. எம். எத்திராஜுலு : தென்னுற்காடு ஜில்லாவில் அங்கே இருக்கிற கடலூர், விழுப்புரம் போன்ற இடங்களில் எவ்வளவு செஸ் நிதி இருக்கிறது என்பதைக் கூற முடியுமா ?

[1st September 1970

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அந்தத் தொகையின் முழு விவரத்தையும் சொல்லிவிடுவது எல்லோருக்கும் நல்லது என்று நான் கருதுகிறேன் :

திருநெல்வேலி (1-6-68 அன்றைய நிலவரப்படி)				ரூ.	7,72,713
திருச்சி	,,	,,	,,		1,60,000
இராமநாதபுரம்	,,	,,	,,		1,60,546
தென்னாற்காடு	,,	,,	,,		8,44,000
மதுரை	,,	,,	,,		7,08,697
சேலம்	,,	,,	,,		31,70,254
தஞ்சாவூர் (31-12-68 தேதிய நிலவரப்படி)					1,30,48,780
கோவை மாவட்டத்தில்		,,	,,		37,80,544

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : மேற்கண்ட மாவட்டங்களில் இருக்கிற தொகையைச் செலவு செய்ய விதிமுறைகள் வகுக்கப்பட்டி ருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : ஏற்கெனவே இருந்த விதிமுறை களில் சில சிக்கல்கள் இருந்தன. தொடக்கப்பள்ளி, மகப்பேறு நிலையங் கள், மருந்தகங்கள் ஆகியவைகள் கட்டத் தான் செலவழிக்கப்பட வேண்டும் என்று இருந்தது. இதில் உள்ள பல சங்கடங்களை மா வட்ட ஆட்சித் தலைவர்கள் சுட்டிக் காட்டியதன் காரணமாக அண்மை யில் இது திருத்தப்பட்டு, கிராம சமுதாயத்தில் குடி நீர் வழங்க, தொடக்கப் பள்ளி கட்ட, தெரு விளக்கு அமைக்க, மருந்தகங்கள் அமைக்க, இணைப்புச் சாலைகள் அமைக்க ஆகிய அடிப்படை தேவை களைப் பூர்த்தி செய்ய இந்த நிதியிலுள்ள பணத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் முன்வரிசையில் மேற்கொள்ளப்பட வேண்டியவைகள்:

1. குடிநீர் வழங்குதல்.
2. தெரு விளக்குகள் அமைத்தல்.
3. தொடக்கப்பள்ளி கட்டிடங்கள் கட்டல்.
4. தாய்சேய் நல விடுதிகள் அமைத்தல் (மகப்பேறு நிலையம்).
5. மருந்தகம் கட்டுதல்.
6. இணைப்புச் சாலைகள் போடுதல், ஆகியவையாகும்.

மேற்சொன்ன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க, நேரடியாகவோ, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக, பொது மக்களிடமிருந்து இணையான தொகையை வசூலித்தோ, வசூலிக்கா மலோ, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பணத்தை அந்த மாவட் டத்திலேயே செலவு செய்யலாம் என்றும் சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாவட்ட வளர்ச்சிக்குழு முடிவு செய்தபடி, மருத்துவக் கல்லூரி போன்ற ஏனைய காரியங்களுக்கும் பயன்படுத்தப் படலாம் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

1st September 1970]

திரு. கே. ராஜாராம் : இந்த மாவட்டங்களில் செலவு செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மாவட்ட வளர்ச்சிக் குழுவில் அங்கீகாரம் இதற்கு வேண்டுமா ? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு யூனியனுக்கும் இவ்வளவு என்று உத்தரவிட்டால் போதுமா, மாவட்ட வளர்ச்சிக் குழுவில் இது வைக்கப்பட வேண்டுமா, அரசாங்கத்தின் அனுமதியும் பெற வேண்டுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே இந்தப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். பெரும்பாலும் மாவட்ட வளர்ச்சி மன்றங்களையும் ஊராட்சி ஒன்றியங்களையும் கலந்து கொண்டுதான் செய்யப்படும் என்று கருதுகிறேன். மீண்டும் அரசாங்கத்தின் அனுமதிக்காக வரவேண்டியதில்லை என்றுதான் நினைவு. இந்தச் சிக்கல்தான் குறைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : ஒவ்வொரு வருஷமும் இந்த நிதியிலிருந்து 100-க்கு இத்தனை சதவீதப் பணம்தான் செலவழிக்கப்பட வேண்டும் என்று விதி ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : நம்முடைய தேவைகள் அதிகமாக இருப்பதால், அப்படிப்பட்ட தடைகள் விதிக்காமல், இருக்கிற தொகையைப் பயன்படுத்தி ஊர்நல முன்னேற்றத்தை அதிகப்படுத்த வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறோம்.

திரு. எம். அய்யாசாமி : ரயில்வே செஸ் நிதி என்பது எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது ? எப்படி மாவட்டங்களுக்குச் சேர்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : 1884-ஆம் ஆண்டின் ஊராட்சி வாரியங்கள் சட்டத்தின் 57 (2)-வது பிரிவுப்படி, டிராம்வே, இருப்புப் பாதைகள் மட்டும் அமைக்கப் பயன்படும் இடங்களின் வாடகை மதிப்பின் மேல் முந்தைய நாணய முறையைச் சேர்ந்த 3 பைசாவுக்கு மேற்படாமல் மாவட்டக் கழகங்கள் வரி விதித்து வந்தன. அவ்வாறு வரி போட்டு வசூலித்த தொகையைக் கொண்டு அமைந்ததுதான் இந்த ரெயில்வே செஸ் நிதி.

திரு. டி. கே. சுப்பையா : இந்த நிதியைப் பயன்படுத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எப்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : சரியான தேதி நினைவில்லை. அநேகமாக 10 நாட்களுக்குள்ளாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. எம். எத்திராஜுலு : தென்னுற்காடு மாவட்டத்தில் ரூ. 8,46,000 செஸ் நிதி இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தென்னுற்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூர் என்.டி.யில் திருப்பாப்புலியூர் ரயில்வே கேட் அடிக்கடி மூடப்பட்டு அதன் காரணமாக போக்குவரத்தில் தடை ஏற்படுகிறது. இதைப்பற்றிப் பல ஆண்டுகளாக மாநில அரசுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் எழுதி அங்கே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டும் என்று பொது மக்கள் கேட்டு வருகின்றார்கள். இந்த ரூ. 8,46,000 யைப் பயன்படுத்தி அங்கே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மேல்பாலம் கட்டுவதற்கான தகவலைப் பற்றிய கேள்வியை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் கேட்டிருக்க வேண்டும். அதற்கு மாநில அரசு ஒரு குறிப்பிட்ட தொகை ஒன்றையும் மத்திய அரசு ஒரு பகுதியையும் ஏற்று உள்ளூரில் இருக்கிற நகராட்சி மன்றம் ஒரு பகுதியையும் ஏற்று, இம்மூன்றும் சேர்த்து அமைக்கிற நிலையில் இருக்கிறது. இந்த நிதி கிராமப் பகுதிகளில் பயன்பட வேண்டும் என்றிருக்கிறது. ஆகவே இந்த நிலையைக் கொண்டு கிராம வளர்ச்சிப் பணிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மேம்பாலம் கட்டுவதென்பது மத்திய அரசின் உதவியோடு நடைபெற வேண்டியிருக்கிறது.

MR. CHAIRMAN : Now we take up postponed question 59.

Palar-Porandalaru Scheme

[†]*59. —THIRU M. ARUMUGASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the present stage of the execution of Palar-Porandalaru Scheme in Madurai district ; and

(b) the acreage of lands that will be benefited by this scheme ?

பாலார்-புரந்தலார் திட்டம்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை மாவட்டம் பாலார்—புரந்தலார் திட்டம் செயல் படுத்தப்படுவது எந்நிலையில் உள்ளது ?

(இ) இத்திட்டத்திஞல் பயனடையும் நிலப்பரப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) இந்தத் திட்டம் மத்திய நீர் மின் விசை குழுவுக்கு 16-11-68-இல் அனுப்பப்பட்டு மத்திய நீர் மின் விசைக்குழுவின் ஆரம்ப குறிப்புகளுக்கு 16-10-69-ல் பதில் அனுப்பப்பட்டது. மத்திய நீர் மின் விசை திட்டக் குழு இவைகளின் அனுமதி கிடைத்துவிட்டது. இத்திட்டம் விரைவில் எடுத்துக் கொள்ளப்படும்.

(இ) இத் திட்டத்திஞல் சுமார் 14,981 ஏக்கர் பயனடையும்.

[†] Postponed from the List of Questions for 31st August 1970